## தெங்கு பயிர்ச்செய்கைச் சபை – 2017

-----------------------------------------------------------

தெங்கு பயிர்ச்செய்கைச் சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 43 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து தெங்கு பயிர்ச்செய்கை சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 01**

நியமத்தின் 48 ஆம் பந்தியின் பிரகாரம் தேவை ஏற்படுகின்ற அல்லது அனுமதியளிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களைத் தவிர்த்து சொத்துக்களையும் பொறுப்புக்களையும் எதிரீடு செய்ய முடியாது என்ற போதிலும் மாதிரித் தென்னந் தோட்டங்களுக்குச் செலுத்த வேண்டிய மீதியான ரூபா 15,410,650 தொகையும் நாற்று மேடைகளிலிருந்து பெறவேண்டிய மீதியான ரூபா 6,609,604 தொகையும் ஒன்றுக்கொன்று எதிரீடு செய்யப்பட்டு தேறிய பெறுமதியான ரூபா 8,801,046 தொகை நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் மறைப் பெறுமதியாகக் காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02**

(i) மீளாய்வாண்டில் மாதிரி தென்னை பூங்காக்களுக்கான குத்தகை ஒதுக்கீடு ரூபா 138,785 மற்றும் பணமாகச் செலுத்தப்பட்ட ரூபா 38,785 குத்தகைப் பணம் என்பன காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானமாக நிதி செயலாற்றல் கூற்றில் ரூபா 45,235,649 காட்டப்பட்டிருந்த போதிலும் காசு பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 43,136,912 ஆகக் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தோன்றிய காசுப் பாய்ச்சல் ரூபா 2,098,737 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(iii) நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் செலுத்த வேண்டியவைகளின் அதிகரிப்பு ரூபா 75,474,232 ஆக இருந்தும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 68,541,914 ஆகக் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தோன்றிய காசுப் பாய்ச்சல் ரூபா 6,932,318 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

**(இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையற்ற சொத்துக்களின் வினைத்திறன் ஆயுட் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 140,146,793 கிரயமான 239 மோட்டார் வாகனங்கள் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டிருந்தன. அதற்கிணங்க உருவாகியுள்ள மதிப்பீட்டுத்தவறை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

மீளாய்வாண்டின் போது சபைக்கு திறைசேரி மற்றும் அமைச்சு மானியமாக ரூபா 1,463 மில்லியன் கிடைத்திருந்த போதிலும் அதனை ஒரு முறையான அடிப்படையில் பிற்போட்ட வருமானமாக இனங்காண்பதற்கான கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டிற்கான ரூபா 7,596,568 தொகையான கடன்கொடுத்தோர் மீதியை அந்த ஆண்டின் வருமானமாக இனங்கண்டு கொள்ளப்படாத தவறை சரி செய்வதற்காக திரண்ட இலாபத்தில் செம்மையாக்கப்படாது மீளாய்வாண்டிற்கான கடன்கொடுத்தோராகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) திருகோணமலையில் உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தின் கடன்கொடுத்தோருக்குச் செலுத்தப்பட்ட ரூபா 3,588,212 தொகையை இக்கடன் கொடுத்தோருக்கு வரவு வைப்பதற்குப் பதிலாக நடைமுறை வேலைக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) அநுராதபுரம் கட்டுக்கெலியா சுற்றுலா விடுதியை நிர்மாணிப்பது தொடர்பாக ரூபா 491,215 கட்டிட கணக்கிற்கும் கடன்கொடுத்தோர் கணக்கிற்கும் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக அக் கணக்குகளின் மீதி அப் பெறுமதியால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும் இதன் காரணமாக கட்டிட பெறுமானத் தேய்வு ரூபா 124,822 ஆலும் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டில் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்த வேண்டிய பணத்தை தீர்த்து வைக்கும் போது பிழையாக பூர்த்தி செய்யப்படாத வேலைக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்ட ரூபா 844,253 தொகையை மீளாய்வாண்டின் போது சரி செய்யும் போது கடன் கொடுத்தோருக்கு வரவு வைப்பதற்குப் பதிலாக திரண்ட இலாபத்திற்கு வரவு வைத்ததன் காரணமாக கடன்கொடுததோர் அப்பெறுமதியால் அதிகரித்தும் திரண்ட இலாபம் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது.

(உ) வாகன பழுதுபார்த்தல்களுக்காகச் செலவு செய்யப்பட்ட ரூபா 641,390 செலவு மோட்டார் வாகன கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

**2.2.4 விளக்கமளிக்கப்படாத வித்தியாசம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் தென்னை பயிர்ச் செய்கை சபையால் தென்னை ஆராய்ச்சி சபைக்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 31,802,639 ஆகக் காட்டப்பட்டிருந்தும் தென்னை ஆராய்ச்சி சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தென்னை பயிர்செய்கை சபையிடமிருந்து பெற வேண்டிய பயிர்ச்செய்கை சபையிடமிருந்து பெறவேண்டிய மீதி ரூபா 5,210,217 ஆகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் திரண்ட நிதியத்தின் மீதி ரூபா 712,876,018 ஆக இருந்தும் அது 2017 சனவரி 01 ஆந் திகதியில் ரூபா 705,943,698 ஆக முன் கொண்டு வரப்பட்டதன் காரணமாக ரூபா 6,932,320 விளக்கமளிக்கப்படாத வித்தியாசமாகும்.

(இ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஜோன்கீல்ஸ் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய பணம் ரூபா 5,119,000 ஆக இருந்தும் அந்த நிறுவனத்தின் மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் செலுத்த வேண்டிய பணம் ரூபா 500,500 ஆக இருந்ததனால் ரூபா 4,618,500 வித்தியாசம் காணப்பட்டது.

(ஈ) கப்ருக பிணையை ஈடுசெய்தல் முதலீடுகளின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி ரூபா 1,337,340 ஆக இருந்ததுடன் மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் செலுத்த வேண்டிய பணம் ரூபா அம் மீதி ரூபா 1,328,041 ஆக இருந்ததனால் ரூபா 9,299 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(உ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தலைமை அலுவலகத்தின் பணிக்கொடை ஒதுக்கீட்டு துணைப் பதிவேட்டின் பிரகாரம் பணிக்கொடை மீதி ரூபா 168,681,558 ஆக இருந்தும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 159,339,824 ஆக இருந்ததனால் ரூபா 9,341,734 வித்தியாசமாக இருந்ததுடன் அவ்வித்தியாசம் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

மாதிரி தென்னை பூங்கா கணக்குகளில் ஆரம்ப விதைத் தேங்காய் இருப்பு மீதியிலிருந்து ரூபா 888,642 மீதியை செம்மையாக்கவதற்குரிய நாட்குறிப்பு வவுச்சர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிடித்து வைத்தல் பணமாக ரூபா 1,260,899 மீதி ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டு வந்திருந்ததுடன் அம் மீதியைத் தீர்த்து வைப்பதற்கு அல்லது சபையின் வருமானமாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தற்பொழுது சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ள களஞ்சிய காப்பாளர் மற்றும் பணம் அறவிடுவோராக சேவையாற்றுகின்ற எட்டு ஊழியர்களிடமிருந்து 1979 ஆம் ஆண்டிலிருந்து 1992 ஆம் ஆண்டு வரை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த பாதுகாப்பு வைப்பு ரூபா 518,046 தொகையை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டுக் காணப்பட்டது.

(இ) வணிகக் கடன்பட்டோரில் உள்ளடக்கப்பட்ட ரூபா 2,308,030 தொகையான பணம் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்டதுடன் அம்மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் கடன் ரூபா 1,218,973 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் அறவிடாது காணப்பட்ட 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஊழியர் கடன் ரூபா 341,496 ஆக இருந்ததுடன் அந்த மீதியை அறவீடு செய்வதற்கு பொருத்தமான வேலைத்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) கட்டிடங்கள் திணைக்களத்திடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 372,538 மீதியும் தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 6,573,572 மீதியும் 4 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்டது.

(ஊ) 2009 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டியாக நிதிக் கூற்றிக்களில் காணப்பட்டு வரும் ரூபா 26,522 தொகையை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) ஆசிய அபிவிருத்தி வங்கிச் செயற்திட்டத்தின் கீழ் தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்களைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட கடனிலிருந்து அறவீடு செய்யப்பட்ட ரூபா 936,492 மீதி ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்த்து வைக்கப்படாது நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தால் 2015 ஆம் ஆண்டின் போது திவினெகும தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாவட்ட செயலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள தென்னை நாற்றக்களுக்காக அறவிட வேண்டியிருந்த ரூபா 4,445,975 தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 போதிய அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பணப் பெறுமதி ரூபா 563,336,141 தொகையான 13 நாட்குறிப்பு வவுச்சர்கள் அங்கீகரிக்கப்படாது நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 20,936,962 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 265,079,686 ஆக இருந்தனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 286,016,648 வீழ்ச்சியாக இருந்தது. மீளாய்வாண்டின் போது அமைச்சின் நிதி ஏற்பாடு ரூபா 176,142,677 ஆல் குறைவடைந்தமையும் மாதிரி தென்னை பூங்காக்களின் வருமானம் ரூபா 121,369,553 ஆல் குறைவடைந்தமையும் மேற்கூறிய நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 71,772,762 மற்றும் ரூபா 34,890,412 மிகைகள் காணப்பட்டதுடன் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 36,341,560 பற்றாக்குறையாக இருந்தது. மீண்டும் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 265,079,686 மிகை ஏற்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 20,936,962 பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையற்ற சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வை மீண்டும் செம்மையாக்கியதன் பின்னர் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 348,403,288 சாதகப் பெறுமதியான நிறுவனத்தின் பங்களிப்பு 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 344,765,825 ரூபா 347,184,286 ரூபா 654,627,066 வரை அதிகரித்திருந்தும் மீளாய்வாண்டின் போது ரூபா 372,748,791 வரை குறைவடைந்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் சபையின் நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் 2017 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது முறையே 3.74 மற்றும் 6.31 ஆக இருந்ததுடன் விரைவு விகிதம் முறையே 1.08 மற்றும் 1.9 ஆக இருந்ததனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அந்த விகிதங்களில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. அவ்வாறே முன்னைய ஆண்டில் 16 சதவீதமாக இருந்த சபையின் தேறிய இலாப விகிதம் மீளாய்வாண்டின் போது 1.43 சதவீத மறைப் பெறுமதியைக் கொண்டிருந்தது.

### 3.3 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்ட சம்பவங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஏழு ஊழியர்கள் மற்றும் இரண்டு வெளித்தரப்பினர்களால் சபைக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் மூன்று நபர்களால் சேவையிலிருந்து நீக்குதல் மற்றும் முகாமைத்துவதத்தால் இழிவுபடுத்தியதன் அடிப்படையில் ரூபா 11,328,805 தொகை மற்றும் ஒரு சாராதியால் மேற்கொண்ட வாகன விபத்து தொடர்பாக ரூபா 1,000,000 தொகை இழப்பீட்டைக் கோரி சபைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் இரண்டு வெளித்தரப்பினர்களுக்கும் ஒரு ஊழியருக்கும் எதிராக ரூபா 4,555,819 இழப்பீடு கோரி நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயல் நடவடிக்கையும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் மீளாய்வாண்டின் போது நோய் மற்றும் அழிவுகளைக் கட்டுப்படுத்தலின் கீழ் கறுப்பு வண்டுகளைக் கட்டுப்படுத்தும் நோக்கத்திற்காக 2000 டியூப்களை பகிர்ந்தளிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் தேவைப்பாட்டை இனங்கண்டு அவற்றை விரைவாகக் கட்டளையிட்டு தாமதமின்றி பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 500 டியூப்கள் மாத்திரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2017 ஆம் ஆண்டின் போது புதிய பயிர்ச்செய்கை / மீள்பயிர்ச் செய்கை / இடைப்பயிர்ச் செய்கை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 13,700 செவ்விளனி நாற்றுக்களை முறைப்படியாக பயிரிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் 2163 செவ்விளனி நாற்றுக்கள் மாத்திரம் பயிரிடப்பட்டிருந்ததுடன் சபையினால் உயர்ந்த தரமான செவ்விளனி விதைத் தேங்காய்களை இனங்கண்டு பயிரிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) லேனவ, முந்தல் கொஹொம்பன, பளை, கோரொய் ஆகிய மாதிரி தென்னை பூங்காக்களில் மயிடா எதிர்ப்பு வண்டுகளை ஈடுபடுத்தும் செயல் முன்னேற்றம் 10 சதவீதத்திற்கும் 36 சதவீதத்திற்கும் இடைப்பட்டதாகக் காணப்பட்டது. வண்டுச் சேதத்தைத் தடுப்பதற்கு எதிர்ப்பு வண்டுகளை ஈடுபடுத்தாமையின் காரணமாக வண்டுகளால் சேதமடைந்த தேங்காய்களின் அளவு அதிகரித்துள்ளதுடன் சபையில் தோற்றுவிக்கப்பட்டுள்ள வண்டு ஆய்வுகூடங்களில் எதிர்ப்பு வண்டு பக்கட்டுக்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் எதிர்ப்பு வண்டு பக்கட்டுக்களை ஈடுபடுத்துவதற்காக பயிற்சி பெற்ற ஊழியர்களைச் சேர்த்து கொள்வதற்கும் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டின் போது 1,802,654 ஒட்டுக் கன்றுகளை உற்பத்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் உரிய வேளைக்கு பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை, வழங்குனர்களால் உரிய வேளைக்கு பொலித்தீன் பேக்டுகளை வழங்காமை, தரம் குறைந்த பொலித்தீன் பேக்டுகளை வழங்குதல் ஆகிய காரணங்களின் அடிப்படையில் உள்ளபடியாக நடுகை செய்யப்பட்டுள்ள ஒட்டுக்கன்றுகளின் எண்ணிக்கை 659,332 மாத்திரமாகும். அதற்கிணங்க ஒட்டுக்கன்றுகளாக நடுகை செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட 1,143,322 தென்னங் கண்றுகளை நிலக் கன்றுகளாக நடுகை செய்ய வேண்டியிருந்ததுடன் இதன் காரணமாக உழைக்கக் கூடியதாக இருந்த வருமானத்தை சபை இழந்திருந்தது.

(ஆ) அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் 2017 சனவரி 03 ஆந் திகதிய பீஈ/என்பீஈ/சீசீபீ/ஜீஈஎன்/2016 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் மாதாந்தம் ரூபா 120,000 வீதம் 04 குழாம் வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், மாதாந்த தவணைப் பணம் ரூபா 165,000 வீதம் செலுத்தப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 180,000 பணத்தை மாதாந்தம் மேலதிகமாகச் செலுத்த வேண்டியிருந்ததுடன் இந்த வாகனங்களை குழாம் வாகனங்களாக ஓடுவதற்கு ஈடுபடுத்தாது உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களாக ஓடுவதற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

(இ) ரூபா 55 மில்லியன் கிரயமான நீர்கொழும்பு விதைத் தேங்காய்ப் பிரிவின் புதிய அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கு ஒரு ஆலோசனைக் கம்பனிக்கு ரூபா 2,149,974 பணம் செலுத்தப்பட்டிருந்தும் பொருத்தமான ஒரு ஒப்பந்தக்காரரைத் தெரிவு செய்வதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கை எடுத்திருக்காமையின் காரணமாக 2018 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரை கட்டிடத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 433,039 மீதியான 3 வங்கிக் கணக்குகள் 6 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் அக் கணக்குகளைத் தீர்த்து வைப்பதற்கு முகாமைத்துவத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

குருனாகல் உத்தியோகபூர்வ இல்லத்தின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக ரூபா 2,838,619 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டிலிருந்து அந்த நிர்மாண நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தது.

## 4.4 ஆளணி நிர்வாகம்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் முறையே 925 மற்றும் 637 ஆக இருந்ததனால் பதவியணியில் 288 நபர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டன. மேலும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி மாதிரி தென்னைப் பூங்காகக்களுக்காக 110 உத்தியோகத்தர்கள் சபையினால் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளுதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ''நிகழ்ச்சி நிரலின்'' பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அதற்கிணங்க சபையால் தமது நோக்கெல்லைக்கு உட்பட்ட செயற்பாடுகள் சம்பந்தமாக எவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டடுள்ளது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தென்னைப் பயிர்ச்செய்கையின் செயலாற்றலைப் அறவீடு செய்வதற்கான தரவு அடிப்படை பேணப்படாததன் காரணமாக மேலே குறிப்பிடப்பட்டவாறு செயலாற்றலை அளவீடு செய்வதற்கான குறிகாட்டியினை இனங்காண்பதற்கு முடியாதிருந்தது.

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக சபையினால் இனங்காணப்பட்ட செயற்பாடுகள் வருடாந்த திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் அச்செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தேவையான நிதி ஏற்பாடுகள் வருடாந்த பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அமுல்படுத்துவது சம்பந்தப்பட்ட சபையின் கடமைப் பொறுப்புக்கள் சம்பந்தமாக அக்கறையுள்ள தரப்பினர்களாக சிறிய மற்றும் மத்திய அளவான விவசாயிகளை இனங்காணக்கூடியதாக இருந்தும் சபையினால் அவர்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபையினால் 03 மாதங்கள் அளவிலான தாமதத்தின் பின்னர் 2018 மே 30 ஆந் திகதியே கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 6.2 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்

#### 6.2.1 பெறுகைகள்

ரூபா 7,461,500 பெறுமதியான சூரிய வலு முறைமை மீளாய்வாண்டின் போது ஸ்தாபிக்கப்பட்டிருந்தும் அது பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

#### 6.2.2 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

2015 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட ரூபா 36,726,905 ஒப்பந்த பெறுமதியான மாத்தளை பிராந்திய அலுவலகத்தின் இரண்டு மாடிக் கட்டிடத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் 2017 யூலை 04 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன் இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இரண்டு மாடிக் கட்டிடத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தை ஒரு ஒப்பந்தமாக வழங்கப்படாது பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.4 ஆம் பந்திக்கு முரணாக இரண்டு மாடியை இரண்டு கட்டமாகப் பிரித்து இரண்டு ஒப்பந்தங்களாக ஒரே ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) ஒப்பந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் முடிவுறுத்தப்படாததன் காரணமாக உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தப் பெறுமதியில் 10 சதவீத உச்ச அளவின் கீழ் ரூபா 3,672,710 தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) கணக்கீடு | i | நாட்குறிப்பு வவுச்சர்கள் அங்கீகரிக்காமை |
| | ii | சில அரசதுறை கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்படாமை. |
| (ஆ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு | i | அதிக விளைச்சலைப் பெற்றுக்கொள்ளக் கூடிய விதைகளை நடுகை செய்யாமை வெற்றியளிக்காத தென்னங் கன்றுகளை அகற்றாமை, நாற்றுக்களை முறைப்படியாக பராமரிக்காமை என்பன. |
| | ii | நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையான மரங்களைப் பேணுதல், தென்னைப் பயிர்ச் செய்கையைப் பராமரித்தல். |
| (இ) மனித வளங்கள் முகாமைத்துவம் | | வெற்றிடமாக உள்ள பதவிகளுக்காக பொருத்தமான ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ளாமை. |